**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.118/2021**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஓம்குமார்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **தங்கசாமி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(17.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது அயன்மேட்டுபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அயன்மேட்டுப்பட்டி புத்தூர் மலையில் மலைராமன் கோவில் உள்ளது. அந்த கோவிலில் உண்டியலை 03.03.2021ம் தேதி யாரோ உடைத்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர் மறுநாள் நாங்கள் நேரில் சென்று கோவிலை பார்த்துவிட்டு சிந்துபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.118/2021**
**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **கண்ணுசாமி** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பெரிய கண்ணன் என்ற கருப்பணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(17.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது அயன்மேட்டுபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அயன்மேட்டுப்பட்டி புத்தூர் மலையில் மலைராமன் கோவில் உள்ளது. அந்த கோவிலில் உண்டியலை கடந்த 4 வருடங்களுக்கு முன்பு யாரோ உடைத்துவிட்டதாக சொன்னார்கள். நாங்கள் பார்த்துவிட்டு புகார் கொடுத்தோம். அ.சா.1 புகாரை கொடுத்தார். உண்டியலை உடைத்த நபர் யார் என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No:CC.118/2021**
**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **காசிமாயன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **ராஜாங்கம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(17.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது அயன்மேட்டுபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊர் மலையடிவாரத்தில் மலைராமன் கோவில் உள்ளது. அந்த கோவிலில் மலையடிவாரத்தில் 04.03.2021ம் தேதி போலிசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். **மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும்**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை